**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

EA.1/2022 in EP.95/2021

சாட்சி : PW–1

பெயர் : கார்த்திகா தேதி: 06.06.2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

என் அம்மா கோகுலம் சீட்டில் 4 சீட்டில் சேர்ந்திருந்தார் என்றும், அதுபற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த 4 சீட்டும் தலா 25 லட்சம் மதிப்பு மிக்கது என்றும், எனது அம்மா ரூ.1 கோடி மதிப்புள்ள சீட்டுகளில் சேர்ந்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என் அம்மா மேற்படி 4 சீட்டுகளிலும் 4 வது தவணையில் தொகை எடுத்துள்ளார் என்ற விவரம் இசைவு தீர்வு மையத்தின் அவாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம் அப்படி தான் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்படி இசைவு தீர்ப்பு மையத்தின் அவர்டியின் படி இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மா இரண்டு உத்தரவுகளின் படி பணம் செலுத்த வேண்டும் என்று அவார்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த உத்தரவுகளின் படி நான் பணம் கட்ட தயாராக உள்ளேனா என்றால் சீட்டு பற்றிய முழு விவரங்கள் எனக்கு தெரியாது. என் அம்மா எவ்வளவு தொகை வாங்கினார்கள் எவ்வளவு தொகை கட்டியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

என் அம்மா எவ்வளவு பணம் கட்டியுள்ளார். எவ்வளவு கட்டவேண்டியுள்ளது என்ற விவரங்களை எதிர் மனுதாரர் தீர்ப்பாயத்தில் தெரிவித்து அதன் பின்பு தான் அவார்டு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இசைவு தீர்ப்பாயத்தில் உத்தரவு பிறப்பித்தது எனக்கு தெரியும். ஆனால் மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நான் என்னுடைய கடன் ரூ.10 லட்சத்தை வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளேன் என்று சொல்லி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

இந்த எதிர்மனுதாரர் இசைவு தீர்ப்பாயத்தின் அவார்டின் அடிப்படையில் தான் இந்த மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், நான் சொல்லும் MOD அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அதற்கான விவரங்கள் எனக்கு தெரியாது. நிறைவேற்று மனுவில் சொல்லியுள்ள விவரங்களை பார்த்து தான் நான் என் மனுவை தயார் செய்தேன்.

இந்த எதிர்மனுதாரர் இசைவு தீர்ப்பாயத்தின் உத்தரவு பற்றி நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ளது என்றும், ஆனால் எனக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்று நான் பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு மனுவைப்பற்றிய விவரமும், இசைவுதீர்ப்பாய அவார்டு பற்றியும் தெரியாததால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,
III Additional District Court,
Salem.